(பத்தாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

**இல. 159.]**

# பாராளுமன்றத்தின் ஒழுங்குப் பத்திரம்

## 2026 ஜூன் 25, வியாழக்கிழமை, மு.ப. 9.30 மணிக்கு

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1.

27/2024

கௌரவ சட்டத்தரணி ஹேஷா விதானகே அங்கும்புர ஆரச்சி,— பொதுநிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அனைத்து பிரதேச சபைகளிலும் அதன் சொத்துகள் தொடர்பான தகவல்களை திட்டவட்டமாக குறித்துரைக்கும் ஆவணமொன்று இருக்க வேண்டுமென்பதையும்;

(ii) பெரும்பாலான பிரதேச சபைகளில் அவ்வாறான ஆவணமொன்றில்லை என்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) ஆமெனில், அது தொடர்பாக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2.

135/2024

கௌரவ சமிந்த விஜேசிறி,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அமைச்சரவை அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்காக இன்றளவில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள பங்களாக்கள் மற்றும் உத்தியோகபூர்வ இல்லங்களின் எண்ணிக்கை யாது;

(ii) மேற்படி ஒவ்வொரு பங்களாவையும்/உத்தியோகபூர்வ இல்லத்தையும் பயன்படுத்தும் அமைச்சரின்/பிரதி அமைச்சரின்/பாராளுமன்ற உறுப்பினரின்/ பொதுமக்கள் பிரதிநிதியின் பெயர் மற்றும் பதவிப் பெயர் ஆகியன வெவ்வேறாக யாது;

(iii) பொதுமக்கள் பிரதிநிதிகளுக்கு சிறப்புரிமைகளை / வசதிகளை வழங்குவது தொடர்பில் பாரிய சமூக எதிர்ப்பு எழுந்துள்ள நிலையில், மக்கள் பிரதிநிதிகளுக்கு அவற்றை வழங்குவது தொடர்பில் அரசாங்கத்தின் நிலைப்பாடு யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3.

1412/2025

கௌரவ சாணக்கியன் ராஜபுத்திரன் இராசமாணிக்கம்,— போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மட்டக்களப்பு மாவட்டத்தில் பயணிகள் போக்குவரத்துச் சேவையில் ஈடுபட்டுள்ள இலங்கை போக்குவரத்துச் சபையும் தனியார் போக்குவரத்து துறையும் இணைந்து சேவைகளை வழங்க வேண்டும் என்பதை ஏற்றுக்கொள்வாரா;

(ii) ஆமெனில், அது தொடர்பாக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி மாவட்டத்தில் பேருந்து மற்றும் புகையிரதச் சேவைகள் உட்பட பொதுப் போக்குவரத்துச் சேவைகள் திருப்திகரமானதாக இல்லை என்பதை அறிவாரா;

(ii) ஆமெனில், மேற்படி நிலைமையை சீர்செய்வதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை;

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

4.

1887/2026

கௌரவ அபூபக்கர் ஆதம்பாவா,— சுற்றாடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அம்பாறை மாவட்டத்தின் கரையோரப் பிரதேசங்கள் பலவற்றில் கடல் அரிப்பு ஏற்பட்டிருப்பதன் காரணமாக, பொது விளையாட்டு மைதானங்கள் மற்றும் உட்புற வீதிகள் உட்பட பெருமளவிலான நிலப்பரப்பு அழிவுக்குட்பட்டுள்ளது என்பதையும்;

(ii) அப்பிரதேசங்களில் உள்ள மயானங்கள் கடல் அரிப்புக்கு உட்பட்டு உடல் எச்சங்கள் வெளிப்புறச் சூழலுக்கு தெரிபடும் நிலை ஏற்பட்டுள்ளதால் குடியிருப்பாளர்களுக்கு பாரிய சமூக மற்றும் சூழல்சார் பிரச்சினைகளுக்கு முகம்கொடுக்க நேரிட்டுள்ளது என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி பிரதேசங்களில் மேலும் கடல் அரிப்பு ஏற்படுவதைத் தடுப்பதற்காக, இதுவரை எடுக்கப்பட்ட மற்றும் எதிர்காலத்தில் எடுக்கப்படவிருக்கும் குறுகிய கால, நீண்ட கால மற்றும் நிரந்தர நடவடிக்கைகள் வெவ்வேறாக யாவையென்பதையும்;

(ii) மேற்கூறிய இடங்கள் அழிவதைத் தடுப்பதற்காக, கல்வேலி மற்றும் கல் அணை போன்ற கரையோரப் பாதுகாப்பு கட்டமைப்புகளை அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

5.

1977/2026

கௌரவ சுகத் வசந்த த சில்வா,— இளைஞர் விவகார மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) விளையாட்டுகளில் மாற்றுத்திறனாளி வீரர்களின் தீவிரப் பங்களிப்பை மேம்படுத்துவதற்கு எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவை;

(ii) அதற்காக பாடசாலை மற்றும் தேசிய மட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள அணுகல் வசதிகள் மற்றும் பங்கேற்பு வாய்ப்புகள் யாவை;

(iii) இந்த வீரர்களுக்குத் தேவையான உபகரணங்களை வழங்குவதற்கும் விளையாட்டு மைதானங்களில் அணுகல் வசதிகளை உறுதிப்படுத்துவதற்கும் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) கடந்த ஆண்டில் மாற்றுத்திறனாளி வீரர்கள் பங்கேற்ற தேசிய மட்டத்திலான போட்டிகளின் எண்ணிக்கை யாது;

(ii) இந்த வீரர்கள் பெற்றுள்ள வெற்றிகளின் முன்னேற்றம் யாது;

(iii) வலய, மாகாண மற்றும் தேசிய மட்டத்திலான போட்டிகளுக்கு அவர்களை ஆற்றுப்படுத்தும் போது, நியாயமான மற்றும் சமமான அணுகலை உறுதிப்படுத்துவதற்கான அளவுகோல்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றனவா;

(iv) அவ்வாறாயின், அந்த அளவுகோல்கள் யாவை;

(v) அவர்களின் திறமைகளை இனங்கண்டு சர்வதேசப் போட்டிகளுக்கு ஆற்றுப்படுத்துவதற்கு எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை;

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) மாற்றுத்திறனாளி வீரர்களின் திறன்களை மேம்படுத்துவதற்காக நிபுணத்துவப் பயிற்சியாளர்கள் மற்றும் விளையாட்டு ஆலோசகர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளார்களா;

(ii) அவ்வீரர்களுக்காக விசேடமாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ள போட்டிகள் உள்ளனவா;

(iii) அவ்வாறாயின், அந்தப் போட்டிகளை ஏற்பாடு செய்யும் நிறுவனங்கள் யாவை;

என்பதை அவர் மேலும் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

6.

2011/2026

கௌரவ தேவானந்த சுரவீர,— போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2025 ஆம் ஆண்டில் கொழும்பு மாவட்டத்தில் முச்சக்கர வண்டிகள் மூலமான பயணிகள் போக்குவரத்தையும் பாடசாலைப் பிள்ளைகள் மற்றும் அலுவலகப் பணியாளர்களுக்கான போக்குவரத்தையும் மேற்கொள்வதை தமது வாழ்வாதாரமாக மேற்கொள்ளும் நபர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்;

(ii) மேற்படி போக்குவரத்துச் சேவை சார்ந்ததாக, 2025 ஆம் ஆண்டில் கொழும்பு மாவட்டத்தில் உருவாகியுள்ள முறைசாரா தொழில் வாய்ப்புகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி தொழிற்றுறைகளில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு சட்டரீதியான பாதுகாப்பைப் பெற்றுக் கொடுத்தல், உரிமைகளைப் பாதுகாத்தல் மற்றும் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துதல் ஆகியவற்றின் மூலமாக அவர்களை பயனுறுதிமிக்க பிரசைகளாக முன்னேற்றுவதற்கு மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(ii) இன்றேல், மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

7.

2034/2026

கௌரவ சுனில் றாஜபக்ஷ,— பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) திட்வா சூறாவளிக்கு முன்னர் இரத்தினபுரி மாவட்டத்தில் அதிகளவு மண்சரிவு அபாயம் உள்ள வலயங்களிலிருந்து வெளியேற்றப்பட்ட குடும்பங்களுக்காகத் தாபிக்கப்பட்ட கிராமங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி கிராமங்களில் காணித் துண்டுகள் கிடைத்தும், வீடுகளை நிர்மாணிப்பதற்காக வழங்கப்படும் 1,600,000 ரூபா பணம் கிடைக்கப் பெறாத குடும்பங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) பணம் கிடைக்காதவர்களுக்கு அப்பணம் வழங்கப்படும் திகதி யாதென்பதையும்;

(iv) தாபிக்கப்பட்டுள்ள கிராமங்களில் வீதிகள், நீர், மின்சாரம் மற்றும் கழிவகற்றல் போன்ற வசதிகள் தொடர்பான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

8.

2037/2026

கௌரவ சுஜீவ திசாநாயக்க,— வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பொருளாதார மத்திய நிலையங்களை நிறுவியதன் நோக்கங்கள் நிறைவேறியுள்ளனவா;

(ii) வாரியப்பொல பிரதேசத்தில் பொருளாதார மத்திய நிலையம் ஒன்று நிறுவப்பட்டுள்ளதென்பதை அறிவாரா;

(iii) ஆமெனில், அதனை நிர்மாணிப்பதற்கு செலவாகியுள்ள பணத்தொகை எவ்வளவு;

(iv) மேற்படி நிலையத்தினுள் இயங்கும் நிறுவனங்கள் யாவை;

(vi) இன்றளவில் மேற்படி நிலையத்தினால் அரசாங்கத்திற்குக் கிடைத்துள்ள வருமானம் எவ்வளவு;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

9.

2040/2026

கௌரவ வருண லியனகே,— வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் கூட்டுறவுச் சங்கங்களினால் நிர்வகிக்கப்படும் எரிபொருள் நிரப்பு நிலையங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி எரிபொருள் நிரப்பு நிலையங்களினால் விநியோகிக்கப்படுகின்ற எரிபொருளுக்கு பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினால் தரகுப் பணம் செலுத்தப்படுகிறதா என்பதையும்;

(iii) ஆமெனில், மேற்படி பணத்தொகை எவ்வளவு என்பதையும்;

(iv) எரிபொருள் கொள்வனவு விலைக்கான பெறுமதி சேர் வரியை செலுத்தும் தரப்பினர் யாவர் என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) கொள்வனவு விலை மற்றும் விற்பனை விலைகளிடையே நிலவும் வித்தியாசத்திற்கு அமைவாக கூட்டுறவுச் சங்கங்களினால் பெறுமதி சேர் வரி செலுத்தப்பட வேண்டியுள்ளமையை அறிவாரா என்பதையும்;

(ii) அதன் காரணமாக கூட்டுறவு எரிபொருள் நிரப்பு நிலையங்கள் இலாபத்தை ஈட்ட முடியாமல் மூடப்படும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளமையை அறிவாரா என்பதையும்;

(iii) ஆமெனில், மேற்படி நிரப்பு நிலையங்களை நடாத்திச் செல்வதற்கு மானிய முறையிலான வேலைத்திட்டமொன்றைச் செயற்படுத்துவதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

10.

2051/2026

கௌரவ (கலாநிதி) வீ.எஸ். இராதாகிருஷ்ணன்,— சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தற்போது நுவரெலியா மாவட்டத்திலுள்ள தோட்ட சுகாதார நிலையங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) அவற்றுள், அரசாங்கத்தால் சுவீகரிக்கப்பட்டுள்ள தோட்ட சுகாதார நிலையங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) எதிர்காலத்தில் அரசாங்கத்தால் சுவீகரிக்கப்படவுள்ள தோட்ட சுகாதார நிலையங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## பிரேரணை முன்னறிவித்தல்கள்

1.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அமர்வு,— பாராளுமன்ற நிலையியற் கட்டளை 8 இன் ஏற்பாடுகளினால் தடைபெறாமல், இன்றைய தினம் சபை அமர்வு நேரம் மு.ப. 9.30 மணி முதல் பி.ப. 12.30 மணி வரையும் மற்றும் பி.ப. 1.00 மணி முதல் பி.ப. 5.30 மணி வரையும் இருக்குமாக. மு.ப. 11.30 மணிக்கு பாராளுமன்ற நிலையியற் கட்டளை 8(5) தொழிற்படுமாக. பி.ப. 5.30 மணிக்கு சபாநாயகர் பாராளுமன்றத்தை ஒத்திவைப்பாராக.

2.

கௌரவ (டாக்டர்) ஜனக சேனாரத்ன,— சட்டமூலம் கொண்டுவர அனுமதி,— பின்வரும் சட்டமூலம் கொண்டுவர அனுமதி வழங்கப்படுமாக :-

"இலங்கை மருந்தாக்கவியல் சங்கத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்"

---

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*1.

வலுசக்தி அமைச்சர்,— இலங்கை மின்சாரச் சட்டத்தின் கீழ் கட்டளை,— 2024 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க, இலங்கை மின்சாரச் சட்டத்தின் 1(2) ஆம் பிரிவின் கீழ் அப்போதைய வலுசக்தி அமைச்சரினால் விதிக்கப்பட்டு, 2026 மாச்சு 05 ஆம் திகதிய 2478/41 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2026.06.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*2.

பணம் தூய்தாக்கல் தடை (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*3.

நிதிசார் கொடுக்கல்வாங்கல்களை அறிக்கையிடல் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*4.

பயங்கரவாதி நிதியளிப்பை ஒடுக்குதல் மீதான சமவாய (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*5.

புத்த சாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர்,— தொல்பொருளியல் கட்டளைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— (188 ஆம் அத்தியாயமான) தொல்பொருளியல் கட்டளைச் சட்டத்தின் கீழ் 46 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 47 ஆம் பிரிவின் கீழ் புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரால் 2026 ஏப்ரல் 11 ஆம் திகதி ஆக்கப்பட்டதும் 2026.06.12 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*6.

இருப்பாட்சியாளர்களைப் பாதுகாத்தல் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*7.

வாடகை (நீக்கல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*8.

தண்டனைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (2025 செப்தெம்பர் 24) [1].

*9.

தொலைத்தொடர்பு அறவீடு (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*10.

நிதி (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*11.

பட்டலந்த வீடமைப்புத் திட்டத்தில் உள்ள சித்திரவதைக்கூடங்கள், சட்டரீதியற்ற தடுப்பு நிலையங்களை நிறுவுதல், பராமரித்தல் ஆகியவற்றை விசாரணை செய்த ஆணைக்குழுவின் அறிக்கை,— விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (2025 ஏப்ரல் 10 ),— "2025 மார்ச் 14 ஆம் திகதியன்று பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட பட்டலந்த வீடமைப்புத் திட்டத்தில் உள்ள சித்திரவதைக்கூடங்கள், சட்டரீதியற்ற தடுப்பு நிலையங்களை நிறுவுதல், பராமரித்தல் ஆகியவற்றை விசாரணை செய்த ஆணைக்குழுவின் அறிக்கை பாராளுமன்றத்தினால் பரிசீலனை செய்யப்படுமாக." எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

12.

மாகாண சபைத் தேர்தல்கள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

13.

இலங்கை வசதிகள் முகாமைத்துவ நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

14.

காணி அபிவிருத்தி (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

15.

கோதாகொட குணரதன நாஹிமி மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* **அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.**

---

[1] "சட்டமூலம் இப்பொழுது இரண்டாம் முறையாக மதிப்பிடப்பெறுமாக" எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

# எழுத்துமூல விடைக்கான வினாக்கள்

1.

890/2025

கௌரவ (கலாநிதி) எம். எல். ஏ. எம். ஹிஸ்புல்லாஹ்,— கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2017.01.01 திகதி தொடக்கம் 2025.03.31 திகதி வரையான காலப்பகுதியில், மட்டக்களப்பு மாவட்டத்தின், கோரளைப்பற்று வடக்கு, வாகரை பிரதேசச் செயலாளர் பிரிவில், அரசாங்கத்தினால் 'அளிப்புப் பத்திரங்கள்' அல்லது 'காணி உரிமம்' பத்திரங்கள் ஊடாக வழங்கப்பட்ட அரச காணிகளில் மக்கள் வசிக்கின்றார்கள் என்பதை அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அவ்வாட்களின் எண்ணிக்கை, அவர்களின் பெயர்கள் மற்றும் ஏற்புடைய விபரங்கள் என்பன யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2.

891/2025

கௌரவ (கலாநிதி) எம். எல். ஏ. எம். ஹிஸ்புல்லாஹ்,— கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) காணியற்ற மக்கள் தங்களுக்குக் காணியொன்றைப் பெற்றுக் கொள்வதற்காக 2017.01.01 முதல் 2025.03.31 திகதி வரையான காலப்பகுதிக்குள் கோரளைப்பற்று வடக்கு, வாகரை பிரதேச செயலகத்தில் விண்ணப்பத்துள்ளார்கள் என்பதை அவர் அறிவாரா;

(ii) ஆமெனில், அம் மக்களின் எண்ணிக்கை, பெயர்கள் மற்றும் ஏற்புடைய விபரங்கள் யாவை;

(iii) அம் மக்களுக்கு அளிப்புப் பத்திரம் அல்லது காணி உரிமம் வழங்கப்பட்டுள்ளதா;

(iv) ஆமெனில், அம் மக்களின் எண்ணிக்கை, பெயர்கள் மற்றும் ஏற்புடைய விபரங்கள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) கோரளைப்பற்று வடக்கு, வாகரை பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள அரச காணிகளில் குடியிருப்பவர்களில் பலருக்கு இன்று வரை அளிப்புப் பத்திரம் அல்லது காணி உரிமம் வழங்கப்படாதுள்ளது என்பதை அவர் அறிவாரா;

(ii) ஆமெனில், அம் மக்களின் எண்ணிக்கை, பெயர்கள் மற்றும் ஏற்புடைய விபரங்கள் யாவை;

(iii) அம் மக்களுக்கு இதுவரை காணி உறுதி அல்லது காணி உரிமம் வழங்கப்படாமைக்கான காரணங்கள் யாவை;

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3.

892 /2025

கௌரவ (கலாநிதி) எம். எல். ஏ. எம். ஹிஸ்புல்லாஹ்,— கமத்தொழில், கால்நடை வளங்கள் காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2019.01.01 தொடக்கம் 2025.03.31 வரையில் கோரளைப்பற்று வடக்கு, வாகரை பிரதேச செயலகப் பிரிவில் 'உருமய' அறுதி உறுதியை பெற்றுக்கொள்வதற்கு விண்ணப்பித்தவர்களின் எண்ணிக்கை மற்றும் அவர்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

(ii) கடந்த அரசாங்கத்தின் விசேட வேலைத்திட்டத்தின் கீழ் மேற்படி காலப்பகுதியினுள் குறிப்பிட்ட நபர்களுக்கு 'உருமய' அறுதி உறுதி வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், அந்த நபர்களின் எண்ணிக்கை மற்றும் பெயர்கள் யாவை என்பதையும்;

(iv) 'உருமய' அறுதி உறுதியை பெற்றுக்கொள்ள விண்ணப்பித்தவர்களில் சிலருக்கு அந்த உறுதிகள் வழங்கப்படவில்லை என்பதை அறிவாரா என்பதையும்;

(v) ஆமெனில், அந்த நபர்களின் எண்ணிக்கை மற்றும் பெயர்கள் யாவை என்பதையும்;

(vi) அவர்களுக்கு இதுவரை 'உருமய' அறுதி உறுதி வழங்கப்படாததற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?